Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Circular letter No/GR/06/2018**

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2017 நவம்பர் மாதம் 23-ம் தேதி அன்று உலக நாடுகளின் அமைதிக்காக, குறிப்பாக கொங்கோ ஜனநாயக குடியரசு மற்றும் தெற்கு சூடானில் வாழும் மக்களிடையே அமைதி நிலவ உரோமையில் உள்ள தூய பேதுரு பேராலயத்தில் இரவு செபவழிபாடு நடத்தினார். இதன் தொடர்ச்சியாக, திருச்சபை முழுவதும் ஒன்றாக இணைந்து 2018 பிப்ரவரி 23 - ஆம் நாளை "செபநாளாக" உண்ணாநோன்பு இருந்து ஆராதனை செய்து இந்நாடுகளின் அமைதிக்காக செபிக்க வேண்டும் என்று அறிவித்தார். இதனை கடந்த ஞாயிற்றுக்கிழமை, அதாவது பிப்ரவரி 4, 2018 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தூய பேதுரு பேராலய வளாகத்தில் நடத்திய மூவேளை செபத்தைத் தொடர்ந்து அனைத்து ஆயர்களிடமும் இறைமக்களிடமும் அதிகாரபூர்வமாக கேட்டுக்கொண்டார். அகில உலகத்திருச்சபை இந்நாளை "செபநாளாக" அனுசரித்து மனித இதயங்களை குறிப்பாக கொங்கோ மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகளில் அதிகாரத்தில் இருப்போர், பிரிவினைகள் மற்றும் கருத்து வேற்றுமைகளை ஏற்படுத்துவோர் ஆகியோரின் இதயங்களையும் அவர்களது பிரிவினை சிந்தனைகளையும் இறைவன் மாற்ற இறைமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செபிக்க வேண்டும் என்று திருத்தந்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

வேதனையுடனும் கலக்கத்துடனுமான தமது மக்களின் வேண்டுதல்களை நமது விண்ணகத் தந்தை கேட்காமல் இருக்க மாட்டார் என்னும் நம்பிக்கையுடன் நாம் செபிப்பதோடு, உலக அமைதிக்காக என்னால் என்ன செய்ய இயலும் என்று ஒவ்வொரு மனிதனும் தனக்குள் கேள்வி எழுப்ப வேண்டும் என்றும் திருத்தந்தை கேட்டுக்கொண்டுள்ளார். பிறருக்காக செபிப்பதை பற்றி திருத்தந்தை பின்வருமாறு கூறுகிறார்: 'செபம் என்பது எல்லோராலும் எப்போதும் செய்ய முடிகின்ற ஒன்று. நம்பிக்கையோடான செபம் எப்போதும் அனைவருக்கும் பயனள்ள தீர்வு அளிக்கும்'. எனவே நாம் எப்போதும் உலக மக்களின் அமைதிக்காகவும் அவர்களின் நலனிற்காகவும்

இறை வேண்டுதல் செய்வோம். வரம்பு மீறிய வன்முறை செய்யமாட்டேன் என்று ஒவ்வொரு மனிதனும் உறுதிமொழி எடுக்க வேண்டும். வன்முறையால் பெற்றுக்கொண்ட வெற்றி தவறான வெற்றி, அவ்வெற்றியில் ஒருவரும் பெருமை பாராட்டுதல் கூடாது. நாம் அமைதிக்காக உழைக்கும்போது, அனைவரின் நன்மைக்காக உழைக்கின்றோம் என்ற உணர்வு நம்முள் வெளிப்படவேண்டும்.

எனவே, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுகொண்டதற்கு இணங்க, நமது மறைமாவட்டத்தில் பிப்ரவரி 23, 2018 வெள்ளிக்கிழமையை "செபநாளாக" அனுசரிப்போம். நமது மறைமாவட்ட அருட்தந்தையர்கள் தங்களது பங்குகளில் அன்றைய தினம் திருத்தந்தையின் கருத்துக்களுக்காக ஒருநாள் ஆராதனை, அதாவது காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை, நடத்த வேண்டும் என்று உங்களை கேட்டுக்கொள்கிறேன். நாம் நமது ஆலயங்களில் வழக்கமாக துக்க வெள்ளி அன்று நடத்தப்படும் ஆராதனை முறைப் போன்று ஆராதனையின் ஒவ்வொரு மணிநேரத்தையும் நம் பங்கு மக்களுக்கு பகிர்ந்தளித்து அவர்களை பங்கு பெறச்செய்ய வேண்டும் என்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரையான ஒருநாள் ஆராதனை பின்வரும் முறையில் நடத்தலாம்.

1. தனிநபர் ஆராதனை
2. உறவிய கூட்டங்கள் வாரியான ஆராதனை
3. பக்த இயக்கங்களின் ஆராதனை
4. பொது ஆராதனை
5. நற்கருணை ஆசீர் / திருப்பலி

இவ் ஆராதனையை காலை திருப்பலியுடன் தொடங்கி, மாலையில் (ஆடம்பர) இறுதி ஆசீருடன் நிறைவு செய்யவோ அல்லது காலையில் ஆராதனை தொடங்கி இறுதியில் நற்கருணை ஆசீர், அதனை தொடர்ந்து திருப்பலி நிறைவேற்றுவதோடு நிறைவுச் செய்யலாம். இறைமக்கள் அனைவரும் இயன்றவரை முழுமனதுடன் திருந்தந்தையின் வேண்டுதலுக்காக இந்நாளை பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
08.02.2018

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

✠ **ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்டம்

---

**குறிப்பு:** இச்சுற்றுமடலை 2018 பிப்ரவரி 11-ம் தேதி திருப்பலிக்குப்பின் உங்களுடைய பங்குகளில் வாசிக்க வேண்டும்.